# தமிழ்நாடு மின் துறை பொறியாளர் அமைப்பு
# Tamilnadu Power Engineers Organisation

Regd. No : 2998/CNI
Under Indian Trade Union Act, 1926
Afiliated : COTEE - EEFI

27, Mosque Street, Chepauk, Chennai - 600 005. Ph : 28548529, 28515038 Fax : 28516574 Web : www.tnpeo.org e-mail : tnpeogs@gmail.com

**R.Sridhar** Honorary President | **T.Arivazhagan** President | **K.Arulselvan** General Secretary | **K.Jeevanandham** Treasurer | **S.Appadurai** Organising Secretary

**M.Parimelazhagan R.Guruvel A.Palani**
Deputy General Secretaries


பெறுநர்

30-06-2014.

தலைவர் மற்றும் நிர்வாக இயக்குனர்,
தமிழ்நாடு மின்சார வாரியம்,
N.P.K.R.R. மாளிகை,
144, அண்ணா சாலை,
சென்னை - 2

அய்யா,

பொருள்: மின்வாரியத்தில் உள்ள விநியோக பகுதியில் பணி புரியும் இளநிலை பொறியாளர் மற்றும் உதவி பொறியாளர்கள், உதவி செயற் பொறியாளர்களின் பல்வேறு இன்னல்கள் மீது தீர்வு கண்டிடுதல் - சம்மந்தமாக.

#####

வணக்கம்! எங்களது சங்கத்தின் நிர்வாகிகள் கூட்டம் கடந்த 22.06.2014 அன்று சென்னையில் நடைபெற்றது. அதில் விநியோக பகுதியில் பணி புரியும் இளநிலை பொறியாளர் ,உதவி பொறியாளர்கள் மற்றும் உதவி செயற் பொறியாளர்களின் அன்றாடம் பல்வேறு சிரமங்களை சந்தித்து வருகிறார்கள். இது குறித்து பலமுறை வாரிய மேலதிகாரிகளிடம் விவாதித்தும் எந்த முன்னேற்றமும் ஏற்படவில்லை. எனவே கீழ்கண்ட பிரச்சனைகளை தங்களுடைய கனிவான கவனத்திற்கு கொண்டு வருகிறோம். ஆகவே தாங்கள் இந்த விஷயத்தில் தனி கவனம் செலுத்தி தேவைப்பட்டால் ஒரு குழு அமைத்து இளநிலை / உதவி பொறியாளர்கள், உதவி செயற்பொறியாளரின் அன்றாட துன்பங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டுகிறோம்.

## விநியோக பகுதியில் பணி புரியும் இளநிலை பொறியாளர் மற்றும் உதவி பொறியாளர்கள் மற்றும் உதவி செயற் பொறியாளர்களின்

பொதுவான பிரச்சனைகள்

1. மின் இணைப்பு கோருவோர்களுக்கு மின் விரிவாக்கப் பணிகள் செய்வதற்கு work load அடிப்படையில் அனுமதிக்கப்பட்ட பதவிகள் இல்லை. வாரிய ஊழியர்களை வைத்து விரிவாக்கப் பணிகள் (Extension works) செய்வதால் FOC (Fuse of call), மின் மாற்றி பராமரிப்பு, P.D வேலைகள் மற்றும் DC.RC பணிகள் தாமதம் ஆகின்றன. எனவே விரிவாக்கப் பணிகளுக்கென்று போதுமான அனுமதிக்கப்பட்ட பதவிகளை ஏற்படுத்த ஆவண செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. இந்நடவடிக்கையால் மின் விண்ணப்பதாரர்களுக்கு உடனடியாக மின் இணைப்பு வழங்கிட ஏதுவாகும்.

2. விண்ணப்பதாரர்களுக்கு (மின் இணைப்பு வேண்டி கோருபவர்கள்) மின் இணைப்பு வழங்க அனைத்து தளவாட பொருட்களையும் ஒரே நேரத்தில் பெறும் வகையில் ஏற்பாடு செய்யவும் இதனால் நுகர்வோர்களுக்கு விரைவாக மின் இணைப்பு வழங்கலாம்.

3. மதிப்பீடு அனுமதி பெறுவதற்கு தாமதம் ஆவதை தவிர்த்திட, தேவையான உரிய நடவடிக்கை எடுக்க கேட்டுக் கொள்ளப்படுகிறது.

4. மேற்பார்வை பொறியாளர் மற்றும் செயற்பொறியாளர்கள் வழங்கும் மின்மாற்றி உள்ளிட்ட தளவாட பொருள்களின் ஒதுக்கீட்டில் வெளிப்படை தன்மை தேவைப்படுகிறது. ஒதுக்கீடு விபர பட்டியல் அனைத்து உதவிப்பொறியாளர்களுக்கும் Mail அனுப்பிட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

5. உதவி செயற்பொறியாளர்களுக்கு வாகன வசதி செய்து கொடுக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது. (தற்போது வழங்கப்பட்ட காண்ட்ராக்ட் வாடகை தொகையினை உயர்த்தி தந்து தற்பொழுது உள்ள வாகன வசதிகள் இல்லாத நிலையினை மாற்றி தரும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறது) உதவி செயற்பொறியாளர்களுக்கு வாகன வசதிகளை செய்து கொடுப்பதன் மூலம் நுகர்வோரின் குறைகளை கேட்டறிந்து விரைவாக ஆய்வுசெய்து முடிப்பதற்கு ஏதுவாக இருக்கும்.

6. தற்போது வாரியத்தால் வழங்கப்படும் மின் கம்பங்களின் வடிவமைப்பு சரியாக இல்லாததினால் மின்வாரிய பணியாளர்கள் FOC பணிகளை செய்ய கம்பங்களில் ஏறுவதற்கு மிகவும் சிரமமாக உள்ளது. மேலும் மின் கம்பங்களுக்கு வழங்கப்படும் BACK Clamp சரியாக பொருத்துவது இல்லை இதனால் மின் நுகர்வோர்களின் தேவைகளை பூர்த்தி செய்வதற்காக கால தாமதம் ஆகின்றது எனவே இதனை சரிசெய்யும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறது.

7. மின்மாற்றி பழுதடைந்தால் (DT FAILURE) அதனை கொண்டு செல்லவும் பண்டக சாலையில் இருந்து புதிய மின் மாற்றிகளை எடுத்து வரவும் வாரியத்தில் போதிய வாகன வசதிகள் இல்லாத காரணத்தினால் மின் நுகர்வோர்களுக்கு உடனடியாக மின்சாரம் வழங்க கால தாமதம் ஆகின்றது. இதனை தவிர்க்க தனியார் வாகனத்தை பயன்படுத்திக்கொள்ள உரிய அனுமதி வழங்கிட நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

8. பொறியாளர்கள் மீது எந்த விதமான விசாரணையும் இல்லாமல் திணிக்கப்படும் 8 (A) ஒழுங்கு நடவடிக்கையை தவிர்த்திட நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறது. இதனால் பொறியாளர்கள் மன உளைச்சல் இல்லாமல் இருந்து மின் நுகர்வோர்களுக்கு சிறப்பாக பணிபுரிந்திட ஏதுவாக இருக்கும்.

9. ஆண்டுதோறும் ஒவ்வொரு கோட்டத்திற்கும் சிறந்த பொறியாளரை தேர்வு செய்திடவேண்டும். மேலும் சிறந்த பொறியாளர்களுக்கு ஆண்டு தோறும் வழங்கப்படும் ஊக்க தொகையான ரூ.1000/- லிருந்து ரூ.5000/- ஆக உயர்த்தி வழங்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. மேலும் பொறியாளர்கள் பெறும் பரிசுத் தொகை நிகழ்ச்சிகளை செய்தித்தாள் மற்றும் தொலைக்காட்சியில் ஒளிபரப்ப ஏற்பாடு செய்யும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறது. இதனால் சிறப்பாக பணிபுரியும் பொறியாளர்களின் மன நிலை மேன்மை அடைந்து சிறப்பாக பணிபுரிய ஏதுவாக அமையும்.

10. பொறியாளர்கள் மின் விண்ணப்பதாரர்களுக்கு தேவையான மின் தளவாடப் பொருட்களை பெறப்படுவதை கணினியில் பதிவு செய்யப்பட்டு வருகின்றது. பிறகு பணிகள் முடிக்கப்பட்டு மின் இணைப்பு வழங்கியவுடன் கணினி மூலமாகவே பணி ஆணைகளை முடிப்பதற்கான நடவடிக்கைகளை செய்து தரும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறது. இதனால் காலவிரயத்தை தவிர்த்து மற்ற பணிகளை மேற்கொள்ள ஏதுவாக இருக்கும். இதில் தற்போது எடுத்துள்ள முயற்சியில் சில குறைபாடுகள் உள்ளன. அதை சரிசெய்திட உரிய நடவடிக்கை எடுத்திட கேட்டுக் கொள்கிறோம்.

11. பிரிவு அலுவலகத்தில் வசூலிக்கப்பட்ட தொகையினை வருவாய் ஆய்வாளர் மூலம் வங்கியில் செலுத்தப்படும் தொகையினை உடனடியாக கைபேசி குறுந்தகவல் முலம் (SMS) தெரிவிக்கும்படியும் அல்லது தினந்தோறும் வங்கியில் செலுத்தப்பட்ட தொகையின் விபரத்தை தினமும் வங்கியில் இருந்து Mail மூலம் DFC,AAO,AE க்கு தகவல் தெரிவிக்க ஏற்பாடு செய்ய வேண்டும். இதனால் வாரியத்திற்க்கு எற்படும் வருவாய் இழப்பினை உடனடியாக கண்டறிந்து சரி செய்ய எதுவாக இருக்கும்.

12. உதவி பொறியாளர்களுக்கும் உதவி செயற்பொறியாளர்களுக்கும் மின் உபயோகிப்பாளர்களின் குறைதீர்த்தல், HT/LTCT ரீடிங் எடுத்தல் MASS Raid,(கூட்டு ஆய்வு) Mass Maintenance (கூட்டு மின் மாற்றி பராமரிப்பு) Break down work மாதாந்திர அறிக்கைகள் (Monthly Return) தயார் செய்து சமர்பித்தல் மதிப்பீடு